பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 08 2026 TUESDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1) தூய்மை எரிசக்தி திட்டங்களுக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

2) சென்னை - கன்னியாகுமரி தொழில்துறை விரைவுச்சாலைப் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு ஆதவ் அர்ஜூனா கூறியுள்ளார்.

3) கர்நாடக வனத்துறையினரால் தமிழகத்தை சேர்ந்த மூன்று பேர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

4) செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5) உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Unnati Hooda** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை ஊக்குவித்து, புகை மாசில்லா மின் உற்பத்திக்கு இந்தியா முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற 12-ஆவது பிரிக்ஸ் நாடுகளின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், கடந்த 2005-ஆம் ஆண்டு முதல், 2022-ஆம் ஆண்டுக்குள் புகை மாசுவை 37 சதவீதம் குறைத்திருப்பதாக தெரிவித்தார்.

50 சதவீதம் மின் உற்பத்தி தூய்மை எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கிடைப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் தலைமையில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில் புகை மாசுவை கட்டுப்படுத்தவும், தூய்மை எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிக்கவும், வெளிப்படையான ஆக்கப்பூர்வமான கருத்துகளை உறுப்பு நாடுகளுக்கு முன்வைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரிக்ஸ் சுற்றுச்சூழல் செயற்குழு கூட்டங்களிலும் இதற்கான கலந்துரையாடல் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்தியா சமர்ப்பிக்கும் இதுதொடர்பான ஆவணங்கள் உறுப்பு நாடுகளுக்கு பேருதவியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் மாசுவை கட்டுப்படுத்துவதற்கான கொள்கை அதற்கான தொழில்நுட்பம் மற்றும் மக்களின் பங்களிப்பையும் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு புபேந்தர் யாதவ் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

சென்னை - கன்னியாகுமரி இடையே தொழில்துறை விரைவுச்சாலைப் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சாலை மேம்பாடு மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு ஆதவ் அர்ஜூனா தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய அவர், சென்னை புறவட்டச்சாலை பணிகளும் நடைபெற்று வருவதாக கூறினார்.

மத்திய அரசின் நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ், மாநில அரசின் பங்கேற்புடன் சாலை அமைக்கும் பணிகள் 17 ஆயிரத்து தொள்ளாயிரத்து 58 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் உள்கட்டமைப்பு நிதியத்தின்கீழ், சேது பந்தன் திட்டத்தின்கீழ், சென்னையில் தேனாம்பேட்டை முதல் — சைதாப்பேட்டை வரை 621 கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்டப் பாலம், மவுண்ட் பூந்தமல்லி முதல் ஆவடி வரை மற்றும் மியாட் மருத்துவமனை முதல், முகலிவாக்கம் வரையில் சென்னை மெட்ரோ ரயில்

நிறுவனத்துடன் நான்குவழிப்பாதை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

சிறு துறைமுகப்பணிகளை மேம்படுத்தவும், தமிழகம் முழுவதும் உள்ள துறைமுகங்களுக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் உள்ள கடலோரப் பகுதிகளில் படிப்படியாக பயணியர் படகு போக்குவரத்தை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

கன்னியாகுமரியிலும், ராமேஸ்வரம் பகுதியிலும் இதற்கான நடவடிக்கைகள் சாகர்மாலா திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ளதாக திரு ஆதவ் அர்ஜூனா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தை சேர்ந்த மூன்று பேரை கர்நாடக வனத்துறையினர் சுட்டுக்கொன்ற சம்பவத்திற்கு பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எந்த மாநிலத்தை சேர்ந்த மக்களாக இருந்தாலும் அவர்களை சுட்டுக்கொல்வதற்கு எந்தவித உரிமையோ, அதிகாரமோ வனத்துறையினருக்கு கிடையாது என்று கூறியுள்ளார்.

கர்நாடக முதலமைச்சருக்கும் தமது கண்டனத்தை தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் தவெக ஆட்சி ஆரம்பித்து 100 நாட்களுக்குள் ஊழல் முறைகேடுகள் தொடங்கிவிட்டதாகவும் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>

கோ ஆப் டெக்ஸின் 10 விற்பனை நிலையங்களை மூடும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் கடலூர், சேலம், வேலூர், திருநெல்வேலி நகரங்களிலும், ஆந்திரா மற்றும் மகாராஷ்ட்ரா மாநிலங்களிலும் செயல்பட்டுவரும் கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையங்களை மூட அரசாணை வெளியிட்டிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, கைத்தறி துணி விற்பனையை அதிகரிக்க உருவாக்கப்பட்ட கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூடப்பட்டு வருவது கவலையளிப்பதாகவும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் அரசு நிகழ்ச்சிகளில் முதலில் தமிழ்தாய் வாழ்த்து பாடுவதற்கு மத்திய அரசின் அறிவிப்பாணை தடையாக இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

இதுதொடர்பான, பொதுநல மனுவை விசாரித்த தலைமை நீதிபதி திரு சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி, நீதிபதி திரு அருள்முருகன் ஆகியோர் கொண்ட அமர்வு, இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

விசாரணை முடிவடைந்த நிலையில், மனு மீதான தீர்ப்பை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

<<<<<<>>>>>>

செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 50 Sec. )***

<<<<<<>>>>>>

நாகை மாவட்டத்தில் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்மூலம், மரக்கன்றுகள் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள பயனாளிகளுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருவதாக ஊராட்சி செயலர் திரு சக்திவேல் தெரிவித்தார்.

***(Sound Byte — சக்திவேல் — 20 Sec.)***

இந்த திட்டத்தின்மூலம் தங்களுக்கு வேலைவாய்ப்ப கிடைத்திருப்பது குறித்து பயனாளி திருமதி தனலட்சுமி மகிழ்ச்சி தெரிவித்தார்.

***(Sound Byte —தனலட்சுமி — 20 Sec.)***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வேலூரில் மாணவ, மாணவியர் பங்கேற்ற போதைப்பொருட்களுக்கு எதிரான உறுதிமொழி ஏற்பு மற்றும் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் திருமதி லீலா அலெக்ஸ் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடை கட்டிடத்தை ஆட்சியர் திருமதி பிரியா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---------------

திருவள்ளூரில், ஒருங்கிணைந்த எயிட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில் எயிட்ஸ் மற்றும் பால்வினை நோய்

தொற்று குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் திருமதி கவிதா தொடங்கிவைத்தார்.

-------------------

காஞ்சிபுரம் மாவட்டம் காட்ராம்பாக்கத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுவரும் **8** வகுப்பறை கொண்ட கட்டிடத்தை மாவட்ட ஆட்சியர் திருமதி.தி.சினேகா இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

------------

மயிலாடுதுறையில் உள்ள அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் பெண்களின் பாதுகாப்பு குறித்து ''விழிப்புடன் இருங்கள் — பாதுகாப்பாக இருங்கள்'' என்ற தலைப்பில் மாவட்ட சைபர் கிரைம் பிரிவு காவல்துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

--------------------

நாகப்பட்டினம் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க இம்மாதம் **31-**ஆம் தேதிவரை இணையதளத்தில் பதிவு செய்யலாம் என்று மாவட்ட ஆட்சியர் திரு பிரவீன்குமார் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Unnati Hooda** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **22-20, 21-16** என்ற செட் கணக்கில் மியான்மரின் **Thet Htar Thuzar-**ஐ வென்றார்.

------------

**18** வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி **7.30-**க்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>**